# தொழிலாளர் துறை

அனுப்புநர்

திருமதி. வே. இரா. சுப்புலெட்சுமி, இ.ஆ.ப..
தலைவர்/ மாவட்ட ஆட்சியர்,
வேலூர்.

பெறுநர்

அனைத்து மாவட்ட முதல் நிலை அலுவலர்கள்

**ந.க.எண்.இ/663/2025, நாள்: 21.04.2025**

**ஐயா/அம்மையீர்,**

பொருள்: தொழிலாளர் துறை - தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947 - தமிழில் பெயர் பலகைகள் அமைத்தல் - வேலூர் மாவட்டத்தில் மாவட்ட அளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள கோருதல் - தொடர்பாக.

பார்வை : சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண்.எஸ்2/32921/2024, நாள்: 28.03.2025

*****

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் அவர்களால் 25.03.2025 அன்று நடைபெற்ற காணொலி காட்சி கூட்டத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947 மற்றும் விதிகள் 1948 விதி 15(1) ன்படியும், உணவு நிறுவனங்கள் சட்டம் 1958 மற்றும் விதிகள் 1959 விதி 42(B) ——ன்படியும் தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 92 ——ன்படியும் தமிழில் பெயர் பலகையானது 5:3:2 என்ற முறையில் அமைப்பது தொடர்பாக நடைமுறைப்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் மே மாதம் 15 தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தமிழ் பெயர்பலகை வைக்காத கடைகள் நிறுவனங்களுக்கு மே 16 ஆம் தேதி முதல் விளக்கம் கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் ரூ.2000/- அபாரதமும் உணவு நிறுவனங்களுக்கு 5 பணியாளர்களுக்குள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.100/-ம் 6 முதல் 10 வரை பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.200/-யும் 11 முதல் 20 வரை பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.300/-ம் 21 முதல் 50 வரை பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.400/-ம், 51 முதல் பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனத்திற்கு ரூ.500-ம், தொழிற்சாலைகளுக்கு தண்டனை அல்லது ரூ.1,00,000/- அபாரதமும் விதிக்கப்படும் எனவே, அனைத்து துறை அலுவலர்களும் தத்தமது அட்சி எல்லையில் தமிழில் பெயர் பலகை 100 சதவீதம் அமைப்பது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

ஒப்பம்/-
மாவட்ட ஆட்சித் தலைவர்
வேலூர்

//உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

21/4/25

தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்)
வேலூர்